**OS.454/2021 P.W.1– ராஜசேகர் 18.06.2025**

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் உரிமையாளராக உள்ள லோட்டஸ் இன்போ சர்வ் என்ற நிறுவனம் என்ன தொழில் செய்து வருகிறது என்றால் கணினி விற்பனை, சேவை மற்றும் கணினிகளை வாடகைக்கு விடுவது ஆகிய வேலைகளை செய்து வருகிறது. 1ம் பிரதிவாதிக்கு எத்தனை கணினிகளை நான் வாடகைக்கு விட்டேன் என்றால் ஒவ்வொரு மாதமும் எண்ணிக்கையில் வேறுபாடு இருக்கும். ஒவ்வொரு மாதமும் எத்தனை கணினிகளை அவர் எடுத்து பயன்படுத்துகிறாரோ அதற்கு வாடகை வசூலிப்பேன். முதல் விசாரணை சாட்சியத்திலும், வழக்குரையிலும் அவ்வாறு 1ம் பிரதிவாதி எத்தனை கணினிகளை வாடகைக்கு விட்டேன் என்று குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை, ஆனால் பில்களில் அந்த விவரம் உள்ளது. வா.சா.ஆ.1ல் அவ்வாறு எத்தனை கணினிகளை வாடகைக்கு விட்டேன் என்ற விவரமும், ஒவ்வொரு மாதமும் அவ்வாறு எத்தனை கணினிகளை வாடகைக்கு விட்டேன் என்ற விவரமும் உள்ளது. 08.02.2018 முதல் 30.09.2020 வரை 1ம் பிரதிவாதிக்கு கணினிகளை வாடகைக்கு விட்டேன், அச்சு இயந்திரங்களை (பிரிண்டர்ஸ்) விற்பனை செய்தேன். அவ்வாறு எத்தனை அச்சு இயந்திரங்களை நான் விற்பனை செய்தேன் என்ற விவரத்தை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. எல்லா இன்வாய்ஸ்சுகளையும் முதல் பிரதிவாதிக்கு தான் அனுப்பினேன் என்றால் சரிதான். எல்லா இன்வாய்ஸ்களையும் 1ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்திய நிலையில் அதற்கு 2ம் பிரதிவாதி எவ்வாறு பொறுப்பாளி ஆவார் என்றால் 2ம் பிரதிவாதி நிறுவனத்தை 1ம் பிரதிவாதி நிறுவனம் டேக் ஓவர் செய்ததாக சொல்கிறார்கள், மேலும் மின் அஞ்சலில் 2ம் பிரதிவாதிக்கு கடிதம் அனுப்பிய போதும் பில் தொகைகளை செலுத்துவதாக கூறியுள்ளார். 2ம் பிரதிவாதி நிறுவனம் 1ம் பிரதிவாதியின் நிறுவனத்தை டேக் ஓவர் செய்தது என்பதை நான் ஊர்ஜிதம் படுத்தினேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி நிறுவனம் மின் அஞ்சல் கடிதத்தில் பில்களை செலுத்துவதாக ஒப்புக்கொண்டது என்று கூறியுள்ள நிலையில் எந்த தேதியிட்ட மின் அஞ்சல் கடிதத்தின் மூலம் அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் சாட்சி வாதி தரப்பு சான்றாவணங்களை பார்த்து வா.சா.ஆ.1ல் கண்ட 19.05.2020 தேதியிட்ட மின்

அஞ்சல் கடிதத்தில் அவ்வாறு காட்டப்பட்டுள்ளது, எவ்வாறு காட்டப்பட்டுள்ளது என்றால் We have raised into Tech Pennar Corporation Teams and awaiting the approval என்று உள்ளது. 1ம் பிரதிவாதிக்காக Tech Pennar Corporation பணத்தை செலுத்துவதாக ஒப்புக்கொண்டதா என்றால் அவர்கள் அவ்வாறு பதில் அனுப்பவில்லை. Tech Pennar Corporation எனக்கு பதில் அனுப்பியதாக கூறியுள்ள நிலையில் 2ம் பிரதிவாதியாக யாரை காட்டியுள்ளேன் என்றால் Pennar Industries Limited என்று காட்டியுள்ளேன். Tech Pennar Corporation என்ற நிறுவனம் மே 2020 ல் இருந்து வந்தது. மே 2020 க்கு முன்பு உள்ள பிரச்சனைகளுக்கு நாங்கள் தான் பொறுப்பு என்று எங்காவது Tech Pennar Corporation கூறியுள்ளதா என்றால் அவ்வாறு அவர்கள் சொல்லவில்லை. Tech Pennar Corporation க்கு Pennar Industries Limited க்கும் என்ன தொடர்பு என்பதை இந்த வழக்கு தொடர்வதற்கு முன்னர் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு Pennar Industries Limited அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையில் 2ம் பிரதிவாதி நிறுவனம் 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் ஒரு பெருமளவு பங்குதாரா் என்றும், அந்த பங்குகளை 2021ம் ஆண்டிலேயே விற்றுவிட்டதாகவும் கூறியுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த விவரத்தை மறுத்து நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சங்கதிகளை கூறியுள்ளேனா என்றால் இல்லை. எந்த விவரங்களையும் நான் முறையாக தெரிந்து கொள்ளாமல் பிரதிவாதியின் மீது நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2ம் பிரதிவாதிக்கு எந்த அறிவிப்பும் அனுப்பாத நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை